மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசு கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியின் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும்

புத்தாண்டு வாழ்த்துகள் மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினருக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். அவர்கள் இந்த மாமன்றத்தின் உறுப்பினராகவும் இருக்கிறார்கள். அவர்கள் பூரண குணமடைந்து வருகின்ற காலங்களில் இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற என்னுடைய அவாவினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததுபோல், இந்த ஐந்து நாட்களும் இந்தச் சபையை நல்ல முறையில் நடத்தி பல்வேறு நிகழ்வுகளை விவாதிப்பதற்கு, பல தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புக் கொடுத்த அனைத்து உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும் கொறடாக்கள் என அனைவருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன். நான் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் தெரிவித்து, என்னுடைய நன்றியோடு பேரவை

[பேரவைத் தலைவர்] [2018 ஜனவரி 12

மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது என்று கூறி, அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

16. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

17. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2012–2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

18. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2013–2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

19. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2014–2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 65(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

20. 1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலச் சட்டத்தை செயல்படுத்துவதில் நிகழ்நிலை குறித்த 2015–2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (சமவாய்ப்பு,